செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

**F. No. 11-264 / CICT/2026 - 2027/Workshop - 134** **Date: 27.07.2026**

## மொழியியல் புலம்

**நடத்தும்**

## இந்தியச் செம்மொழிகளுக்கு இடையேயான பொதுமைப் பண்புகள்

## Commonalities among Indian Classical Languages

**பயிலரங்கம் – 14**

**(20.8.2026 - 31.8.2026)**

**அறிவிப்பும் அழைப்பும்**

பழங்காலம் தொட்டே நம் பாரத தேசம் பன்மொழி பேசும் மக்கள் ஒன்றிணைந்து வாழும் நாடாக விளங்கி வருகிறது. பல மொழிகள் பேசும் மக்கள் ஒன்றிணைந்து வாழ்ந்து வந்துள்ளதால், அவர்கள் பேசும் மொழிகளுக்கிடையே தொடர்ச்சியான மொழி சார்ந்த கடன் வாங்கல்களும் (Linguistic borrowing) கலைச்சொல் பரிமாற்றங்களும் நிகழ்ந்துள்ளன. இந்தத் தொடர்பு, இந்தியாவில் உள்ள பல்வேறு மொழிகளுக்குள், வட்டார வழக்குகள் மற்றும் மரபுகளின் மீது ஒருவருக்கொருவர் மரியாதையையும் ஒற்றுமை உணர்வையும் வளர்த்துள்ளது.

செம்மொழிகள், தங்களின் பாரம்பரிய அறிவுக்களஞ்சியத்தைக் கொண்டு, இந்திய மொழிகளை ஒரு குடும்பமாக இணைப்பதிலும், பிறமொழிக் குடும்பங்களிலிருந்து அவற்றை வேறுபடுத்திக் காட்டுவதிலும் முக்கியப் பங்காற்றி வருகின்றன.

உலகிலேயே பதினொரு மொழிகளைச் செம்மொழிகளைக் கொண்டுள்ள ஒரே நாடு இந்தியா மட்டும்தான் என்பது தனிச்சிறப்பு வாய்ந்தது. அம்மொழிகள் **தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா, மராத்தி, பாலி, பிராகிருதம், அஸ்ஸாமி** மற்றும் **பெங்காலி** ஆகியனவாகும். இச்செம்மொழிகள் ஆழமான இலக்கிய, தத்துவ மற்றும் கலாச்சார மரபுகளைத் தங்களுக்குள் கொண்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் தனக்கெனத் தனித்துவமான அடையாளத்தைக் கொண்டிருந்தாலும், இந்திய அளவிலான, இலக்கணம் மற்றும் தத்துவங்களின் அடிப்படையில் ஆழமான கட்டமைப்பு, கருப்பொருள் மற்றும் அழகியல் பொதுமைகளைப் பகிர்ந்து கொள்கின்றன.

இப்பின்னணியில், பாரத நாடு முழுவதிலுமுள்ள ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் அறிவுத்திறனை மேம்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு **“இந்தியச் செம்மொழிகளுக்கு இடையேயான பொதுமைப் பண்புகள்”** குறித்த **(20.8.2026 - 31.8.2026) 12** நாட்கள் பயிலரங்கை நடத்த செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் (CICT) திட்டமிட்டுள்ளது.

**நோக்கங்கள்**

- இந்தியச் செம்மொழிகளுக்கு இடையே உள்ள பொதுவானத் தன்மைகளை வெளிப்படுத்துதல்.
- ஒப்பீட்டு இலக்கணத்தைக் கற்பிப்பதற்கான உத்திகளை உருவாக்குதல்.
- செம்மொழி மரபுகளை நவீன இலக்கிய ஆய்வுகளுடன் இணைக்கும் ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல்.
- இந்தியாவின் 'வேற்றுமையில் ஒற்றுமை' எனும் மொழியியல் பண்பின் மீதான மதிப்பைப் பலப்படுத்துதல்.

பல்வேறு செம்மொழிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வல்லுநர்கள் பின்வரும் பரந்துபட்ட தலைப்புகளில் விரிவுரைகளை வழங்குவதோடு, கீழ்க்கண்ட தலைப்புகளில் பயிற்சிப் பட்டறைகளையும் நடத்துவார்கள்:

- இந்தியச் செம்மொழிகள் பற்றிய அறிமுகம்
- ஒப்பீட்டு யாப்பியல் மற்றும் அழகியல்
- இலக்கண மரபுகள் மற்றும் மொழியியல் கட்டமைப்புகள்
- கள ஆய்வுகள்: மொழிகளுக்கு இடையேயான இலக்கியக் கடன் வாங்கல்கள்
- உயர்கல்வியில் கற்பித்தல் பயன்பாடுகள்
- ஒப்பீட்டு ஆராய்ச்சிக்கான தொழில்நுட்பக் கருவிகள் (Digital Tools)

இப்பயிலரங்கம் கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களிடையே திறனை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் மூலம், அவர்கள் இந்தியச் செம்மொழிகளை ஒரு ஒப்பீட்டு நோக்கில் அணுகவும், பாரம்பரியக் கருத்துக்களை நவீனக் கல்வி மற்றும் கற்பித்தல் முறைகளோடு ஒருங்கிணைக்கவும் வழிவகை ஏற்படும்.

பல்கலைக்கழகம் / கல்லூரிகளில் தமிழியல், மொழியியல் ஆகிய துறைகளில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவர்களை இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- ❖ பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை **– 40**
- ❖ பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: **20.8.2026** முதல் **31.8.2026** முடிய **12** நாட்கள்.
- ❖ பயிலரங்கு நேரம்: காலை **10.00 - 1.00 &** மாலை **2.00 - 5.00**.
- ❖ பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
- ❖ பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
- ❖ பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
- ❖ பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- ❖ இணையவழி விண்ணப்பத்தை https://forms.gle/1vUXNvpp7NFZrE5M6 என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.
- ❖ நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் **13.8.2026.** காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
- ❖ செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **14.8.2026** அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.

- இப்பயிலரங்கில் பங்கேற்போர் **40** அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
- பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**